T.C. 170

# 097/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMETAL EXAMINATIONS
## LABOUR AND FACTORIES DEPARTMENT TEST – PART – B

(Without Books)

Maximum Time : 2 hours                                                                 Maximum Marks : 80

***IMPORTANT INSTRUCTIONS***

### OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

   (b) In any case, a candidate shall choose only one response for each question.

   (c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

   (d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

   (a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

   (b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

   (c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

   (d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. The licensing Authority under the Beedi and Cigar Workers Act is
   (A) Assistant Commissioner of Labour (Enforcement)
   (B) Deputy Inspector of Labour
   (C) Assistant Inspector of Labour
   (D) Joint Commissioner of Labour

   பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கும் அதிகாரி
   (A) தொழிலாளர் உதவி ஆணையர் (அமுலாக்கம்)
   (B) தொழிலாளர் துணை ஆய்வாளர்
   (C) தொழிலாளர் உதவி ஆய்வாளர்
   (D) தொழிலாளர் இணை ஆணையாளர்

2. The Appellate Authority against the refusal of grant or renew a licence under the Beedi and Cigar Workers Act is
   (A) Assistant Commissioner of Labour (Enforcement)
   (B) Deputy Inspector of Labour
   (C) Assistant Commissioner of Labour (Conciliation)
   (D) Joint Commissioner of Labour

   பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்க அல்லது உரிமம் புதுப்பிக்க மறுக்கும்போது முறையிட வேண்டிய மேல்முறையீட்டு அதிகாரி
   (A) தொழிலாளர் உதவி ஆணையர் (அமுலாக்கம்)
   (B) தொழிலாளர் துணை ஆய்வாளர்
   (C) தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)
   (D) தொழிலாளர் இணை ஆணையாளர்

3. A licence granted under the Beedi and Cigar Workers Act is valid for a period of
   (A) One calender year only
   (B) One financial year only
   (C) 12 months from the date of issue
   (D) Two financial year

   பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உரிமம் —————— காலத்திற்கு செல்லுபடியாகும்.
   (A) ஒரு காலண்டர் வருடம் மட்டும்
   (B) ஒரு நிதியாண்டு மட்டும்
   (C) வழங்கப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்கள்
   (D) இரு நிதியாண்டுகள்

4. In every Beedi and Cigar industrial premises, creches shall be provided wherein female employees ordinarily employed is more than
   (A) 30
   (B) 50
   (C) 100
   (D) 200

   ஒவ்வொரு பீடி மற்றும் சுருட்டு தொழில் நிறுவனத்திலும், —————— எண்ணிக்கையைவிட அதிகமாக பெண் பணியாளர்கள் பணியமர்த்தப்படும் நேர்வில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும்.
   (A) 30
   (B) 50
   (C) 100
   (D) 200

5. Which of the following statement is not correct as per the payment of Bonus Act 1965?
(A) It is not applicable to construction industry
(B) It does not apply to Employees in LIC of India
(C) Allocable surplus means 67% of the available surplus
(D) Employee means 'any person including apprentice'

1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டப்படி, பின்வரும் வாக்கியங்களில் எது தவறு?
(A) இது கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தாது
(B) இது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனப் பணியாளர்களுக்குப் பொருந்தாது
(C) ஒதுக்கீட்டு உபரி என்பதன் பொருள், உபரியாக உள்ள தொகையில் 67 சதவீதம் ஆகும்
(D) பணியாளர் என்றால் பயிற்சி மேற்கொள்பவர் உட்பட எந்த நபரும் அடங்குவர்

6. The ceiling on wage or salary for calculation of Bonus under the payment of Bonus Act 1965 is
(A) Rs. 3,500
(B) Rs. 4,500
(C) Rs. 6,500
(D) Rs. 7,000

1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டப்படி, போனஸ் கணக்கிடுவதற்கான கூலி அல்லது ஊதியத்தின் மீதான உச்ச வரம்புத் தொகை
(A) ரூ. 3,500
(B) ரூ. 4,500
(C) ரூ. 6,500
(D) ரூ. 7,000

7. The payment of Bonus Act 1965 is applicable to an employee who draws wage or salary of
(A) Rs. 3,500 in case of apprentice
(B) Rs. 5,000 in case of apprentice and employee
(C) Rs. 10,000 in case of employee
(D) Rs. 21,000 in case of employee

1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டமானது, ———————— கூலி அல்லது ஊதியம் பெறும் பணியாளருக்குப் பொருந்தும்.
(A) பயிற்சியாளராக இருப்பின் ரூ. 3,500
(B) பயிற்சியாளர் மற்றும் பணியாளராக இருப்பின் ரூ. 5,000
(C) பணியாளராக இருப்பின் ரூ. 10,000
(D) பணியாளராக இருப்பின் ரூ. 21,000

8. Payment of Bonus Act 1965 is applicable to every Factory and to every other establishments where ———————— workmen are employed on any day during an accounting year.
(A) 20 or more
(B) 10 or more
(C) 50 or more
(D) 30 or more

1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டம், கணக்கு ஆண்டின் எந்த ஒரு நாளிலும் ———————— வேலையாட்கள் பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் மற்றும் இதர ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் பொருந்தும்.
(A) 20 அல்லது அதற்கு மேலும்
(B) 10 அல்லது அதற்கு மேலும்
(C) 50 அல்லது அதற்கு மேலும்
(D) 30 அல்லது அதற்கு மேலும்

9. To be entitled for Bonus an employee must have worked at least ———— days in an accounting year in an establishment.

(A) 15 working days (B) 60 working days

(C) 90 working days (D) 30 working days

ஒரு பணியாளர் போனஸ் பெற தகுதிபெற வேண்டுமென்றால் ஒரு நிறுவனத்தில் ஒரு கணக்காண்டில் ———— நாட்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

(A) 15 வேலை நாட்கள் (B) 60 வேலை நாட்கள்

(C) 90 வேலை நாட்கள் (D) 30 வேலை நாட்கள்

10. The minimum bonus which an employer is required to pay even if he suffers losses during the accounting year under the payment of Bonus Act 1965 is

(A) 10% (B) 20%

(C) 8.33% (D) 6.33%

1965-ம் வருட போனஸ் பட்டுவாடா சட்டப்படி, வேலையளிப்பவர் முந்தைய நிதியாண்டில் தனது நிறுவனம் நட்டத்தில் இயங்கினாலும் ———— விழுக்காடு குறைந்த பட்ச போனஸ் தனது பணியாளருக்கு அளிக்க வேண்டும்.

(A) 10 விழுக்காடு (B) 20 விழுக்காடு

(C) 8.33 விழுக்காடு (D) 6.33 விழுக்காடு

11. Canteen shall be provided and maintain in every Beedi and Cigar industrial premises wherein employees ordinary employed are not less than

(A) 100 (B) 150

(C) 200 (D) 250

ஒவ்வொரு பீடி மற்றும் சுருட்டு தொழில் நிறுவனத்திலும் ————எண்ணிக்கைக்குக் குறையாமல் பணியமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு உணவகங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) 100 (B) 150

(C) 200 (D) 250

12. As per the definitions in Tamil Nadu Catering Establishment Act, 1958, child means 'a person who has not completed ———— years of age.

(A) 14 years (B) 15 years

(C) 16 years (D) 18 years

தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1958-ல் உள்ள வரையறைகளின்படி, குழந்தை என்பவர் ———— வயது பூர்த்தியாகாத ஒரு நபர்.

(A) 14 வயது (B) 15 வயது

(C) 16 வயது (D) 18 வயது

13. The Registering authority for catering establishment is

(A) Assistant Commissioner of Labour (Enforcement)

(B) Assistant Inspector of Labour

(C) Deputy Inspector of Labour

(D) Assistant Commissioner of Labour (Conciliation)

தமிழ்நாடு உணவு நிறுவனங்களைப் பதிவு செய்யும் அதிகாரி

(A) தொழிலாளர் உதவி ஆணையர் (அமுலாக்கம்)

(B) தொழிலாளர் உதவி ஆய்வாளர்

(C) தொழிலாளர் துணை ஆய்வாளர்

(D) தொழிலாளர் உதவி ஆணையாளர் (சமரசம்)

14. The maximum daily working hours prescribed for young person in a catering establishment is

(A) 5 hours (B) 6 hours

(C) 8 hours (D) 12 hours

ஒரு உணவு நிறுவனத்தில் இளைஞர்கள் பணிபுரிய நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச வேலைநேரம்

(A) 5 மணி நேரம் (B) 6 மணி நேரம்

(C) 8 மணி நேரம் (D) 12 மணி நேரம்

15. An employee working in a catering establishment is entitled to overtime wages, if he works more than

(A) 8 hours in a day 48 hours in a week

(B) 9 hours in a day 48 hours in a week

(C) 9 hours in a day 54 hours in a week

(D) 8 hours in a day 54 hours in a week

ஒரு உணவு நிறுவனத்தில் ———————— மணி நேரத்தை விட அதிகமாக ஒரு பணியாளர் பணிபுரிந்தால் மிகைநேரப் பணிக் கூலி பெற தகுதியுடையவர்.

(A) ஒரு நாள் 8 மணி நேரம், வாரத்திற்கு 48 மணி நேரம்

(B) ஒரு நாள் 9 மணி நேரம், வாரத்திற்கு 48 மணி நேரம்

(C) ஒரு நாள் 9 மணி நேரம், வாரத்திற்கு 54 மணி நேரம்

(D) ஒரு நாள் 8 மணி நேரம், வாரத்திற்கு 54 மணி நேரம்

16. An employee working in a catering establishment is entitled to interval for rest at least ———————— hour in a day.

(A) Half an hour (B) One hour

(C) One and half hour (D) Two hour

ஒரு உணவு நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு பணியாளர் குறைந்தபட்சம் ———————— மணி நேரம் இடைவேளை ஓய்வு பெற தகுதியுடையவர்.

(A) அரை மணி நேரம் (B) ஒரு மணி நேரம்

(C) ஒன்றரை மணி நேரம் (D) இரண்டு மணி நேரம்

17. The maximum spread over periods of work in a catering establishment in one day is

(A) 8 hours

(B) 10 hours

(C) 12 hours

(D) 14 hours

ஒரு உணவு நிறுவனத்தில் ஒரு தொழிலாளி அதிகபட்சமாக பணியில் இருக்க அனுமதிக்கப்பட்ட நேரம்

(A) 8 மணி நேரம்

(B) 10 மணி நேரம்

(C) 12 மணி நேரம்

(D) 14 மணி நேரம்

18. No contribution is required for getting benefit under which of the following Legislations?

(A) Maternity benefit Act

(B) Employees Compensation Act

(C) Both under (A) and (B)

(D) ESI Act

பின்வரும் எந்த சட்டங்களின் கீழ் பயன்பெற பங்களிப்பு தேவையில்லை

(A) மகப்பேறு நலன் சட்டம்

(B) பணியாளர் இழப்பீட்டுச் சட்டம்

(C) மேற்கண்ட (A) மற்றும் (B) இரண்டும்

(D) இ.எஸ்.ஐ. சட்டம்

19. The name of which of the following legislations has been recently changed?

(A) Workmen Compensation Act

(B) Employees State Insurance Act

(C) Maternity Benefit Act

(D) Payment of Gratuity Act

கீழ்கண்டவற்றில் எந்த சட்டத்தின் பெயர் சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்டது

(A) வேலையாட்கள் இழப்பீட்டுச் சட்டம்

(B) இ.எஸ்.ஐ. சட்டம்

(C) மகப்பேறு நலன் சட்டம்

(D) பணிக்கொடை வழங்கும் சட்டம்

20. Under the Employees Compensation Act, employer shall not be liable to pay compensation in respect of any injury which does not result in the total or partial disablement of the workman for a period exceeding

(A) 7 days

(B) 3 days

(C) 5 days

(D) 2 days

பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், பணியாளருக்கு எந்த வகையிலேனும் காயம் ஏற்பட்டு அதனால் ———————— நாட்களுக்கு மேலாக முழு இயலாமை அல்லது பகுதி இயலாமை ஏற்படாவிட்டால் வேலையளிப்பவர் இழப்பீடு வழங்க பொறுப்பாகமாட்டார்.

(A) 7 நாட்கள்

(B) 3 நாட்கள்

(C) 5 நாட்கள்

(D) 2 நாட்கள்

21. The amount of minimum compensation where death results from the injury under the Employees Compensation Act, is

(A) Rs. 50,000

(B) Rs. 80,000

(C) Rs. 1,20,000

(D) Rs. 1,00,000

தொழிலாளிக்கு விபத்து மரணம் ஏற்படும்போது அவரது சார்ந்தோருக்கு வழங்கப்படக்கூடிய குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 50,000

(B) ரூ. 80,000

(C) ரூ. 1,20,000

(D) ரூ. 1,00,000

22. The amount of minimum compensation where permanent total disablement results from the injury under the Employees Compensation Act is

(A) Rs. 50,000 (B) Rs. 1,00,000

(C) Rs. 1,20,000 (D) Rs. 1,40,000

தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டு நிரந்தர முழு ஊனம் ஏற்பட்டால் வழங்கப்படக்கூடிய குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 50,000 (B) ரூ. 1,00,000

(C) ரூ. 1,20,000 (D) ரூ. 1,40,000

23. Schedule-I of the Employees Compensation Act deals with

(A) List of injuries (B) List of employments

(C) List of occupational diseases (D) List of employees

பணியாளர் இழப்பீட்டுச் சட்டம் அட்டவணை-I கீழ்கண்டவற்றில் எது சம்பந்தமானது.

(A) காயங்களின் பட்டியல் (B) தொழில் பட்டியல்

(C) பணியினால் ஏற்படும் நோய்கள் (D) பணியாளர் பட்டியல்

24. Schedule-III of the Employees Compensation Act deals with

(A) List of injuries (B) List of employments

(C) List of occupational diseases (D) List of employees

பணியாளர் இழப்பீட்டுச் சட்டம் அட்டவணை 3 கீழ்கண்டவற்றுள் எது சம்பந்தமானது

(A) காயங்களின் பட்டியல் (B) தொழில் பட்டியல்

(C) பணியினால் ஏற்படும் நோய்கள் (D) பணியாளர் பட்டியல்

25. As per the recent amendment in the Payment of Gratuity Act, the maximum Gratuity payable is

(A) Rs. 5 lakhs (B) Rs.8 lakhs

(C) Rs. 10 lakhs (D) Rs. 20 lakhs

சமீபத்தில் பணிக்கொடை பட்டுவாடா சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, அதிகபட்சமாக வழங்கப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை

(A) ரூ. 5 இலட்சம் (B) ரூ. 8 இலட்சம்

(C) ரூ. 10 இலட்சம் (D) ரூ. 20 இலட்சம்

26. What is the minimum qualifying service needed for claiming Gratuity?

(A) 5 Years (B) 10 Years

(C) 15 Years (D) 3 Years

பணிக்கொடை கோருவதற்கு தேவையான குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் எவ்வளவு?

(A) 5 வருடங்கள் (B) 10 வருடங்கள்

(C) 15 வருடங்கள் (D) 3 வருடங்கள்

27. The Maximum amount of Gratuity has now been enhanced to Rs. 20 lakhs from

(A) Rs. 3.5 lakhs
(B) Rs. 5 lakhs
(C) Rs. 7.5 lakhs
(D) Rs. 10 lakhs

தற்போது ———————— லிருந்து அதிகபட்சம் ரூ. 20 இலட்சமாக பணிக்கொடை உயர்த்தப்பட்டுள்ளது.

(A) ரூ. 3.5 இலட்சம்
(B) ரூ. 5 இலட்சம்
(C) ரூ. 7.5 இலட்சம்
(D) ரூ. 10 இலட்சம்

28. The minimum persons to be employed in an establishment for coverage of Payment of Gratuity Act 1972 is

(A) 5 or more persons
(B) 10 or more persons
(C) 20 or more persons
(D) 50 or more persons

ஒரு நிறுவனத்திற்கு பணிக்கொடைச் சட்டம் பொருந்த வேண்டுமெனில் குறைந்தபட்சம் ———————— பணியாளர்கள் பணிபுரிய வேண்டும்.

(A) 5 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள்
(B) 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள்
(C) 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள்
(D) 50 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள்

29. For every completed year of service or part thereof in excess of 6 months, the employer shall pay Gratuity to an employee at the rate of ———————— days' wages last drawn towards Gratuity.

(A) 7 days
(B) 15 days
(C) 25 days
(D) 30 days

6 மாதங்களுக்கு மேல் பணிபுரியும் ஒவ்வொரு வருடங்களுக்கும் அல்லது அதன் பகுதியான காலங்களுக்கும், பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதிய விகிதத்தில் ———————— நாட்கள் கணக்கிட்டு பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

(A) 7 நாட்கள்
(B) 15 நாட்கள்
(C) 25 நாட்கள்
(D) 30 நாட்கள்

30. In the case of an employee who is employed in seasonal establishment and who is not so employed throughout the year, the employer shall pay the Gratuity at the rate of ———————— days' wages for each season.

(A) 14 days
(B) 15 days
(C) 8 days
(D) 7 days

பருவகால நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டு வருடம் முழுவதும் பணியில் இல்லாத பணியாளராக இருப்பின், பணியமர்த்துபவர் ஒவ்வொரு பருவகாலத்திற்கும் ———————— நாட்களுக்கான கூலியைக் கணக்கிட்டு பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

(A) 14 நாட்கள்
(B) 15 நாட்கள்
(C) 8 நாட்கள்
(D) 7 நாட்கள்

31. The principle of last come-first go is enunciated in which of the following section under the Industrial Disputes Act?

(A) Section 25-F
(B) Section 25-H
(C) Section 25-G
(D) Section 25-FF

தொழில் தகராறுகள் சட்டத்தின் எந்தப் பிரிவில் கடைசியில் வந்தவர் முதலில் செல்ல வேண்டும் என்ற விதி அடங்கியுள்ளது

(A) பிரிவு 25-F
(B) பிரிவு 25-H
(C) பிரிவு 25-G
(D) பிரிவு 25-FF

32. Section 25-H of the Industrial Disputes Act deals with

(A) Lay off
(B) Re-employment
(C) Strike
(D) Lockout

தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 25-H எது சம்மந்தமானது

(A) லேஆப்
(B) மீண்டும் வேலை
(C) வேலை நிறுத்தம்
(D) கதவடைப்பு

33. The Industrial Dispute Act was first amended in the year

(A) 1947
(B) 1948
(C) 1949
(D) 1950

தொழில் தகராறுகள் சட்டம் முதலில் திருத்தம் செய்யப்பட்ட வருடம்

(A) 1947
(B) 1948
(C) 1949
(D) 1950

34. Power has been given to ———————— to require works committee to be constituted in every Industrial Establishment employing 100 workmen or more.

(A) State Government
(B) Central Government
(C) Appropriate Government
(D) Board of conciliation

100 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு தொழில் நிறுவனங்களிலும் வேலைக்குழு உருவாக்கப்பட வேண்டிய அதிகாரம் ————————க்கு அளிக்கப்பட்டுள்ளது.

(A) மாநில அரசு
(B) மத்திய அரசு
(C) உரிய அரசு
(D) சமரச வாரியம்

35. Which permanent settlement machinery has been mentioned in the Industrial Dispute Act accountable for the speedy and amicable settlement of Industrial Disputes?

(A) Adjudication
(B) Conciliation
(C) Arbitration
(D) High Court

தொழில் தகராறுகள் சட்டத்தில், தொழில் தகராறுகளை விரைவாக மற்றும் சமரசத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அமைப்பு

(A) நீதிமன்றம்
(B) சமரச அதிகாரி
(C) மத்தியஸ்தம்
(D) உயர் நீதிமன்றம்

36. On which date did the Industrial Dispute Act come into force?

(A) 23rd April 1947 (B) 28th April 1937

(C) 1st April 1947 (D) 11th March 1947

எந்தத் தேதியில் தொழில் தகராறுகள் சட்டம் ஒப்புதல் பெற்று அமுலாக்கத்திற்கு வந்தது?

(A) ஏப்ரல் 23, 1947 (B) ஏப்ரல் 28, 1937

(C) ஏப்ரல் 1, 1947 (D) மார்ச் 11, 1947

37. Sub Clause (j) of Section 2 of the Industrial Disputes Act defines the term

(A) Workman (B) Industry

(C) Wages (D) Strike

தொழில் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 2, துணைப் பிரிவு(j) ———— என்ற சொல்லை விவரிக்கிறது.

(A) வேலையாள் (B) தொழில்

(C) கூலி (D) வேலைநிறுத்தம்

38. Sub Clause (s) of Section 2 of the Industrial Disputes Act defines the term

(A) Workman (B) Strike

(C) Lockout (D) Wages

தொழில் தகராறுகள் சட்டத்தின் பிரிவு 2, துணைப் பிரிவு (s) ———— என்ற சொல்லை விவரிக்கிறது.

(A) வேலையாள் (B) வேலை நிறுத்தம்

(C) கதவடைப்பு (D) கூலி

39. Which of the following Section of the Industrial Dispute Act deals with individual dispute on termination of service?

(A) Section 2 (k) (B) Section 2 A

(C) Section 10 (D) Section 11 A

தொழில் தகராறுகள் சட்டத்தின் பின்வரும் பிரிவுகளில் எந்தப் பிரிவு தனிநபர் பணிநீக்கம் குறித்த தகராறினைப் பற்றி விவரிக்கிறது

(A) பிரிவு 2 (k) (B) பிரிவு 2 A

(C) பிரிவு 10 (D) பிரிவு 11 A

40. In every motor transport undertaking, Form No. XV is maintained for

(A) Register of workers (B) Leave Register

(C) Wages Register (D) Service book

ஒவ்வொரு மோட்டார் போக்குவரத்து நிறுவனத்திலும் படிவம் எண். XV ————க்காக பராமரிக்கப்படுகிறது?

(A) வேலையாள் பதிவேடு (B) விடுப்புப் பதிவேடு

(C) சம்பளப் பதிவேடு (D) பணிப்புத்தகம்

41. Which Section in the Industrial Dispute Act discusses about the disqualifications of the Presiding Officers of Labour Court?

(A) 7 A
(B) 7 B
(C) 7 C
(D) 7 D

தொழிலாளர் நீதிமன்றத்தின் தலைமை அதிகாரிகளைத் தகுதிநீக்கம் செய்வது பற்றி, தொழில் தகராறுகள் சட்டத்தின் எந்தப் பிரிவு விவரிக்கிறது?

(A) 7 A
(B) 7 B
(C) 7 C
(D) 7 D

42. How many days of notice has to be given to the workman by the employer in case of any changes to be made in the service conditions specified in the 4th schedule of the Industrial Dispute Act?

(A) 30 days
(B) 21 days
(C) 14 days
(D) 15 days

தொழில் தகராறுகள் சட்டத்தின் 4-வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பணி நிபந்தனைகளில் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின், எத்தனை நாட்களுக்கு முன்பாக வேலையளிப்பவரால் பணியாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட வேண்டும்.

(A) 30 நாட்கள்
(B) 21 நாட்கள்
(C) 14 நாட்கள்
(D) 15 நாட்கள்

43. Under which of the following Legislations there is a provision called 'protected workmen'?

(A) Trade Unions Act
(B) Industrial Employment Standing Orders Act
(C) Factories Act
(D) Industrial Dispute Act

பின்வரும் எந்த சட்டத்தில் 'பாதுகாப்பான பணியாளர்கள்' என அழைக்கப்படும் விதிகள் உள்ளன

(A) தொழிற் சங்கங்கள் சட்டம்
(B) தொழில் நிறுவனங்கள் நிலையாணைகள் சட்டம்
(C) தொழிற்சாலைகள் சட்டம்
(D) தொழில் தகராறுகள் சட்டம்

44. Which one of the following is not a machinery for settlement of Industrial Disputes under the Industrial Dispute Act?

(A) Collective bargaining
(B) Conciliation Officer
(C) Board of conciliation
(D) Labour Court

பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் தொழில் தகராறுகளுக்கு தீர்வு காணும் அமைப்பு அல்ல

(A) கூட்டுப் பேரம்
(B) சமரச அலுவலர்
(C) சமரச வாரியம்
(D) தொழிலாளர் நீதிமன்றம்

45. Under which Schedule of the Industrial Dispute Act, public utility services have been listed out?

(A) 1st Schedule
(B) 2nd Schedule
(C) 3rd Schedule
(D) 4th Schedule

தொழில் தகராறுகள் சட்டத்தின் எந்த அட்டவணையில், பொதுப் பயன்பாட்டுப் பணிகள் பட்டியலிடப்பட்டுள்ளது

(A) 1-வது அட்டவணை
(B) 2-வது அட்டவணை
(C) 3-வது அட்டவணை
(D) 4-வது அட்டவணை

46. In which State Indian Institute of Legal Metrology is situated?

(A) Tamil Nadu
(B) Bihar
(C) Jharkhand
(D) Karnataka

எந்த மாநிலத்தில் இந்திய சட்டமுறை எடை அளவு நிறுவனம் அமைந்துள்ளது?

(A) தமிழ்நாடு
(B) பீகார்
(C) ஜார்கண்ட்
(D) கர்நாடகா

47. Under the Tamil Nadu Plantation Labour Rules, Form No.1 is meant for

(A) Certificate of fitness
(B) Registration application
(C) Certificate of Registration
(D) Register of appeals

தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள படிவம்-1 எது சம்மந்தமானது.

(A) உடற்தகுதிச் சான்று
(B) பதிவு விண்ணப்பம்
(C) பதிவுச் சான்று
(D) மேல்முறையீட்டுப் படிவம்

48. The Inspector of Legal Metrology in Tamil Nadu is

(A) The Deputy Inspector of Labour
(B) The Assistant Inspector of Labour
(C) Assistant Commissioner of Labour (Enforcement)
(D) The Joint commissioner of Labour

தமிழ்நாட்டில் சட்டமுறை எடை அளவு ஆய்வாளர்

(A) தொழிலாளர் துணை ஆய்வாளர்
(B) தொழிலாளர் உதவி ஆய்வாளர்
(C) தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமுலாக்கம்)
(D) தொழிலாளர் இணை ஆணையாளர்

49. The Licencing Authority for Manufacturer, Dealer and Repairer of Weights and Measures in Tamil Nadu is

(A) The Controller of Legal Metrology
(B) The Additional Controller of Legal Metrology
(C) The Deputy Controller of Legal Metrology
(D) The Assistant Controller of Legal Metrology

தமிழ்நாட்டில் எடை அளவைகள் உற்பத்தி, வியாபாரம் மற்றும் பராமரித்தலுக்கான உரிமம் வழங்க அதிகாரம் படைத்த அதிகாரி

(A) சட்டமுறை எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரி
(B) கூடுதல் எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரி
(C) துணை எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரி
(D) உதவி எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரி

50. The Motor Transport Workers Act is applicable to every motor transport undertaking employing ———— or more motor transport workers.

(A) 5 (B) 10
(C) 20 (D) 1

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் ————அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகிற ஒவ்வொரு மோட்டார் போக்குவரத்து நிறுவனத்திற்கும் பொருந்தும்.

(A) 5 (B) 10
(C) 20 (D) 1

51. The Chief Inspector under the Motor Transport Workers Act is

(A) Commissioner of Labour
(B) Additional Commissioner of Labour (Conciliation)
(C) The Joint Commissioner of Labour (Minimum wages)
(D) The Special Joint Commissioner of Labour

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் தலைமை ஆய்வாளர்

(A) தொழிலாளர் ஆணையாளர்
(B) தொழிலாளர் கூடுதல் ஆணையாளர் (சமரசம்)
(C) தொழிலாளர் இணை ஆணையாளர் (குறைந்தபட்ச ஊதியம்)
(D) தனி தொழிலாளர் இணை ஆணையாளர்

52. Under the Motor Transport Workers Act, a "child" means who has not completed ———— year of age.

(A) 14 (B) 15
(C) 16 (D) 18

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தில், 'குழந்தை' என்பது ———— வயது பூர்த்தியாகாதவர்களைக் குறிக்கிறது?

(A) 14 (B) 15
(C) 16 (D) 18

53. The Registering Authority under the Motor Transport Workers Act is

(A) Assistant Commissioner of Labour (Enforcement)

(B) The Joint Commissioner of Labour (Minimum wages)

(C) The Regional Joint Commissioner of Labour

(D) The Deputy Inspector of Labour

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யும் அதிகாரி

(A) தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமுலாக்கம்)

(B) தொழிலாளர் இணை ஆணையாளர் (குறைந்தபட்ச ஊதியம்)

(C) கோட்ட தொழிலாளர் இணை ஆணையாளர்

(D) தொழிலாளர் துணை ஆய்வாளர்

54. Canteens shall be provided and maintained by the employer in every motor transport undertaking where ———————— or more workers are employed.

(A) 100 (B) 150

(C) 200 (D) 250

———————— அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியமர்த்தப்படும் ஒவ்வொரு மோட்டார் போக்குவரத்து நிறுவனத்திலும், வேலையளிப்பவரால் உணவகங்கள் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) 100 (B) 150

(C) 200 (D) 250

55. Certificate of fitness issued under section 23 of the Motor Transport Workers Act is valid for a period of

(A) 6 months (B) 9 months

(C) 12 months (D) 24 months

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 23-ன் கீழ் வழங்கப்படும் உடற்தகுதிச் சான்றிதழ் ————————மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

(A) 6 மாதங்கள் (B) 9 மாதங்கள்

(C) 12 மாதங்கள் (D) 24 மாதங்கள்

56. The Limitation period fixed for prosecution under section 36 of the Motor Transport Workers Act is

(A) 3 months (B) 6 months

(C) 9 months (D) 1 year

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 36-ன் கீழ் வழக்கு தொடுக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கால வரம்பு

(A) 3 மாதங்கள் (B) 6 மாதங்கள்

(C) 9 மாதங்கள் (D) ஒரு வருடம்

57. Which one of the following transport vehicle is exempted in Section 38 of the Motor Transport Workers Act?

(A) All the vehicles belonging to the Central Government

(B) Vehicles used for the transport of sick or injured persons

(C) All the vehicles belonging to the State Government

(D) All the vehicles used for Police Department

மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 38-ல் பின்வரும் எந்த போக்குவரத்து வாகனங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது

(A) மத்திய அரசுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள்

(B) நோய்வாய்ப்பட்ட அல்லது காயமடைந்த நபர்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்

(C) மாநில அரசுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள்

(D) காவல்துறையினர் பயன்படுத்தும் வாகனங்கள்

58. Form-II under the Tamil Nadu Motor Transport Workers Rules is meant for

(A) Application for registration
(B) Certificate of registration
(C) Application for amendment
(D) Certificate of amendment

தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துப் தொழிலாளர்கள் விதி படிவம்-II எது சம்மந்தப்பட்டது

(A) பதிவு செய்வதற்கான விண்ணப்பம்
(B) பதிவுச் சான்றிதழ்
(C) திருத்தத்திற்கான விண்ணப்பம்
(D) திருத்தத்திற்கான சான்றிதழ்

59. The validity period of certificate of registration issued under the Motor Transport Workers Act is

(A) Two calendar years
(B) One calendar year
(C) Three calendar year
(D) Five Calendar year

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் செல்லுபடியாகும் காலம்

(A) இரண்டு காலண்டர் வருடங்கள்
(B) ஒரு காலண்டர் வருடம்
(C) மூன்று காலண்டர் வருடங்கள்
(D) ஐந்து காலண்டர் வருடங்கள்

60. The Plantation Labour Act is not applicable to which one of the following cultivation

(A) Tea
(B) Rubber
(C) Tobacco
(D) Cinchona

தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் பின்வரும் எந்த விவசாயத்திற்குப் பொருந்தாது

(A) தேயிலை
(B) ரப்பர்
(C) புகையிலை
(D) சின்கோனா

61. In order to bring a plantation under the purview of Plantation Labour Act, the minimum measurement of the land and workers must be

(A) 5 hectares or more and 10 employees

(B) 10 hectares or more and 15 employees

(C) 100 hectares or more and 50 employees

(D) 5 hectares or more and 15 employees

ஒரு தோட்டத் தொழிலை, தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் கொண்டு வர குறைந்த பட்சம் இருக்க வேண்டிய நில அளவு மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கை

(A) 5 ஹெக்டேர்ஸ் அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் 10 பணியாளர்கள்

(B) 10 ஹெக்டேர்ஸ் அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் 15 பணியாளர்கள்

(C) 100 ஹெக்டேர்ஸ் அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் 50 பணியாளர்கள்

(D) 5 ஹெக்டேர்ஸ் அல்லது அதற்கு மேற்பட்ட மற்றும் 15 பணியாளர்கள்

62. The Registering Authority under the Plantation Labour Act is

(A) Joint Commissioner of Labour

(B) Assistant Commissioner of Labour (Plantations)

(C) Chief Inspector of Plantations

(D) Assistant Commissioner of Labour (Enforcement)

தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி பதிவு செய்யும் அதிகாரி

(A) தொழிலாளர் இணை ஆணையாளர்

(B) தொழிலாளர் உதவி ஆணையாளர் (தோட்டங்கள்)

(C) தோட்டத் தொழில் தலைமை ஆய்வாளர்

(D) தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமுலாக்கம்)

63. The Chief Inspector of Plantations under the Plantation Labour Act is

(A) Additional Commissioner of Labour (Administration)

(B) Additional Commissioner of Labour (Conciliation)

(C) Commissioner of Labour

(D) Zonal Additional Commissioner of Labour

தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி, தோட்ட நிறுவனங்கள் தலைமை ஆய்வாளர்

(A) தொழிலாளர் கூடுதல் ஆணையாளர் (நிர்வாகம்)

(B) தொழிலாளர் கூடுதல் ஆணையாளர் (சமரசம்)

(C) தொழிலாளர் ஆணையாளர்

(D) மண்டல தொழிலாளர் கூடுதல் ஆணையாளர்

64. As per section 11 of the Plantation Labour Act, every plantation wherein ———— workers are ordinarily employed, one or more canteens shall be provided and maintained by the employer.

(A) 50
(B) 100
(C) 125
(D) 150

தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 11-ன் படி, பொதுவாக ———— பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு தோட்ட நிறுவனங்களிலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவகங்கள் வேலையளிப்பவரால் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

(A) 50
(B) 100
(C) 125
(D) 150

65. The notified Officer for certifying the Standing orders under the Standing Order Act is

(A) Zonal Additional Commissioner of Labour
(B) Regional Joint Commissioners of Labour
(C) Assistant Commissioners of Labour
(D) Deputy Commissioner of Labour

நிலை ஆணைகள் சட்டத்தின் கீழ், நிலை ஆணைகளில் சான்றொப்பமிடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள அலுவலர்

(A) மண்டல தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள்
(B) வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள்
(C) தொழிலாளர் உதவி ஆணையர்கள்
(D) தொழிலாளர் துணை ஆணையாளர்கள்

66. If any question arises on the application or interpretation of Standing order certified under the Standing Orders Act may be referred to the following forum

(A) Supreme Court
(B) High Court
(C) Civil Court
(D) Labour Court

நிலை ஆணைகள் சட்டப்படி சான்றளிக்கப்பட்டுள்ள நிலை ஆணை சம்மந்தமாக விளக்கம் அல்லது கேள்வி எழுந்தால், எந்த நிறுவனம் அதைத் தீர்த்து வைக்கும்

(A) உச்ச நீதிமன்றம்
(B) உயர் நீதிமன்றம்
(C) உரிமையியல் நீதிமன்றம்
(D) தொழிலாளர் நீதிமன்றம்

67. No manual worker can be registered under the Tamil Nadu Manual Workers Social Security and Welfare Scheme, 2006 unless he has not completed

(A) 14 years of age
(B) 15 years of age
(C) 16 years of age
(D) 18 years of age

2006-ம் வருட தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் கீழ், உடலுழைப்பு தொழிலாளர்கள் பதிவு செய்ய குறைந்தபட்ச வயது என்ன?

(A) 14 வயது
(B) 15 வயது
(C) 16 வயது
(D) 18 வயது

68. The Chief Executive Officer of the Tamil Nadu Manual Workers Welfare Board is

(A) The Hon'ble Minister for Labour

(B) The Secretary of the Board

(C) The Principal Secretary to Labour Department

(D) The Commissioner of Labour

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைமைச் செயலாக்க அதிகாரி

(A) மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர்

(B) வாரியத்தின் செயலாளர்

(C) தொழிலாளர் துறையின் முதன்மைச் செயலாளர்

(D) தொழிலாளர் ஆணையாளர்

69. Any manual worker may register his name with the board through

(A) Assistant Commissioner of Labour (Conciliation)

(B) Assistant Commissioner of Labour (Enforcement)

(C) Assistant Commissioner of Labour (Social security scheme)

(D) The Secretary of the board

எந்த உடலுழைப்பு தொழிலாளராலும் ———————— மூலமாக அவருடைய பெயரை வாரியத்தில் பதிவு செய்யலாம்.

(A) தொழிலாளர் உதவி ஆணையாளர் (சமரசம்)

(B) தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமுலாக்கம்)

(C) தொழிலாளர் உதவி ஆணையாளர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)

(D) வாரியச் செயலாளர்

70. The Registration by a manual worker is valid for a period of

(A) 1 year (B) 2 year

(C) 3 year (D) 5 year

உடலுழைப்பு தொழிலாளரால் செய்யப்படும் பதிவு ———————— காலத்திற்கு செல்லுபடியாகும்.

(A) ஒரு வருடம் (B) இரண்டு வருடம்

(C) மூன்று வருடம் (D) ஐந்து வருடம்

71. As per the definitions in Tamil Nadu Shops and Establishment Act, child means "a person who has not completed"

(A) 16 years (B) 15 years

(C) 14 years (D) 18 years

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி, 'குழந்தை' என்பது ———————— வயது நிறைவடையாத ஒரு நபரைக் குறிக்கும்.

(A) 16 வயது (B) 15 வயது

(C) 14 வயது (D) 18 வயது

72. As per the definitions in Tamil Nadu Shops and Establishment Act, young person means "a person who has not completed

(A) 16 years (B) 15 years

(C) 14 years (D) 17 years

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்படி, 'இளைஞர்' என்பது ———————— வயது நிறைவடையாத ஒரு நபரைக் குறிக்கும்.

(A) 16 வயது (B) 15 வயது

(C) 14 வயது (D) 17 வயது

73. The provisions of Shops and Establishment Act does not apply to which of the following persons

(A) Accountants

(B) Cashiers

(C) Salesmen

(D) Persons whose work involves travelling

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்ட விதிகள் கீழ்க்கண்ட எந்த நபருக்குப் பொருந்தாது

(A) கணக்கர்கள்

(B) காசாளர்கள்

(C) விற்பனையாளர்கள்

(D) பயணத்திற்குட்பட்ட வேலையினைச் செய்யும் நபர்கள்

74. The provisions of Shops and Establishment Act does not apply to which of the following establishment:

(A) Go-down

(B) Medical shop

(C) Theatre

(D) Establishment under the State Government

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்ட விதிகள் கீழ்க்கண்ட எந்த நிறுவனத்துக்குப் பொருந்தாது

(A) குடோன்

(B) மருந்து கடை

(C) தியேட்டர்

(D) மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள்

75. Section 11 of the Shops and Establishment Act deals with

(A) Spread over of period of work in shops

(B) Closing of shops and grant of holidays

(C) Daily and weekly hours of work in shops

(D) Opening and closing hours of shops

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 11 —————— குறித்து விவரிக்கிறது.

(A) கடைகளில் தினசரி பணிபுரியம் அதிகபட்ச நேரம்

(B) கடைகளை மூடுதல் மற்றும் விடுமுறை அளித்தல்

(C) கடைகளில் அன்றாட மற்றும் வாரத்தின் பணி நேரம்

(D) கடைகளை திறக்கும் மற்றும் மூடுகிற நேரம்

76. The maximum spread over of periods of work in a day under Shop Act is

(A) 8 hours (B) 9 hours

(C) 12 hours (D) 10 hours

கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு நாளில் பரவலாக பணிபுரியும் நேரம்

(A) 8 மணி நேரம் (B) 9 மணி நேரம்

(C) 12 மணி நேரம் (D) 10 மணி நேரம்

77. Appeal under section 11 of the Trade Unions Act can be filed before

(A) Additional Commissioner of Labour

(B) Labour Court

(C) Appropriate Government

(D) Commissioner of Labour

தொழிற் சங்கங்கள் சட்டம் பிரிவு 11ன் கீழ் மேல்முறையீட்டு மன்றம் எது?

(A) தொழிலாளர் கூடுதல் ஆணையர்

(B) தொழிலாளர் நீதிமன்றம்

(C) உரிய அரசு

(D) தொழிலாளர் ஆணையர்

78. What will be the minimum number of workers required for registration of Trade Union under the Trade Unions Act?

(A) 7 workers

(B) 10%

(C) 100 workers

(D) 10% or 100 workers whichever is less subject to minimum of 7

தொழிற் சங்கங்கள் சட்டத்தின்கீழ் ஒரு தொழிற் சங்கத்தை பதிவு செய்ய தேவையான குறைந்தபட்ச பணியாளர்களின் எண்ணிக்கை

(A) 7 பணியாளர்கள்

(B) 10 விழுக்காடு

(C) 100 பணியாளர்கள்

(D) 10 விழுக்காடு அல்லது 100 இதில் குறைவு அல்லது 7

79. Which of the following Act is not applicable to the Registered Trade Unions?

(A) Industrial Disputes Act

(B) The Shops and Establishments Act

(C) The Companies Act

(D) The Minimum Wages Act

பதிவு பெற்ற தொழிற்சங்கத்துக்கு எந்த சட்டம் பொருந்தாது? குறைவாக இருக்கக்கூடாது?

(A) தொழிற்தகராறுகள் சட்டம்

(B) கடைகள் நிறுவனங்கள் சட்டம்

(C) கம்பெனிகள் சட்டம்

(D) குறைந்தபட்ச கூலிச் சட்டம்

80. A person is qualified to be chosen as a member of the executive or any other office bearer of the registered Trade Union if he attains the age of

(A) 15 years (B) 18 years

(C) 21 years (D) 25 years

ஒரு நபர் எதாவது பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின் அலுவலக பொறுப்பாளராகவோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ தேர்ந்தெடுக்கப்பட அவர் ———————— வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(A) 15 வயது (B) 18 வயது

(C) 21 வயது (D) 25 வயது

097/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMETAL EXAMINATIONS
# LABOUR AND FACTORIES DEPARTMENT TEST – PART – B

(With Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படி பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Write answer any FOUR of the following questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = [illegible])**

1. Define "industrial dispute" under the Industrial Disputes Act, 1947.

   1947-ம் வருட தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ், "தொழில் தகராறு" என்பதை விவரிக்கவும்.

2. Define Strike and Lockouts.

   "வேலை நிறுத்தம்" மற்றும் "கதவடைப்பு" என்பதை விவரிக்கவும்.

3. Describe the reasons for temporary application of model standing orders to an industrial establishment.

   ஒரு தொழில் நிறுவனத்திற்கு மாதிரி நிலை ஆணையை தற்காலிகமாக பயன்படுத்துவதற்கான நேர்வுகளை விவரிக்கவும்.

4. Write a short note on the remedies available for a dismissed person employed in a shop and establishment.

   ஒரு கடை மற்றும் நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்டு பணிநீக்கம் செய்யப்பட்ட நபருக்கு கிடைக்கக்கூடிய தீர்வுகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

5. Describe amalgamation of Trade Unions.

   தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்தல் பற்றி விவரிக்கவும்.

6. Write a note on weekly hours for a plantation worker.

   தோட்டத் தொழிலாளருக்கு வாரப் பணிநேரம் குறித்து குறிப்பு வரைக.

---